# திராவிட நாயகரின் வெற்றிக் குவியல்கள்!

**“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் தமிழ்நாட்டை மேம்படுத்தும் தொண்டை மேல் போட்டுக் கொண்டு அதே பணியாக இருப்பவன். இதைத்தவிர எனக்கு வேறு பணிகள் இல்லை. எனது சிந்தனையும் செயலும் தமிழ்நாடு - தமிழ் நாடு என்று தமிழையும் தமிழர்களையும் தமிழ்நாட்டையுமே நாடி வருகிறது. நான் பிறந்த போது ஸ்டாலின் என்று பெயர் சூட்டிய தலைவர் கலைஞர் . வளர்ந்தபோது - ‘உழைப்பு’ என்று பெயர் சூட்டினார். அப்படி உழைக்கக் கற்றுக் கொடுத்தவர் அவர் தான். ஓய்வெடுத்து உழையுங்கள் என்று ஆலோசனை சொல்பவர்களிடம், ‘ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவரின் மகன் நான் ’ என்று சொல்லுவேன். தலைவர் பாதையே தனிப் பாதை - கலைஞர் பாதையே வெற்றிப் பாதை என வாழ்ந்து வருபவன் நான். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - ஆகிய இருபெரும் தலைவர்கள் உருவாக்கிக் கொடுத்த கொள்கையைக் காப்பேன்.தமிழினத் தலைவர் கலைஞர் அடித்தளமிட்ட நவீனத் தமிழ் நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக - முன்னோடி மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன்”** என்று சொல்லி எந்நாளும் உழைத்துக் கொண்டிருப்பவர்தான் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் திராவிட நாயகன் - கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் - இந்தியாவின் மதிப்புமிக்க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.




இப்படிச் சொன்னவை அனைத்தும், பத்தாண்டுகள் கழித்து, 25 ஆண்டுகள் கழித்து நிறைவேறப் போகும் கனவுகள் அல்ல. நம் கண்ணுக்கு முன்னால் நிறைவேற்றிக் காட்டி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

அனைத்திலும் முன்னேறி வருகிறது தமிழ்நாடு. கல்வியில், பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், வாழ்க்கைத் தரத்தில், உள்கட்டமைப்பு வசதியில் முன்னேறி வருகிறது தமிழ்நாடு. பட்டினிச் சாவு இல்லாத தமிழ்நாடாக இருக்கிறது. வளமான தமிழ்நாடாக வளர்ந்து வருகிறது.

மற்ற மாநிலங்கள் ஏக்கத்துடன் பார்க்கும் மாநிலமாக உயர்ந்து வருகிறது. ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையே தமிழ்நாட்டைப் பாராட்டுகிறது. நிதி ஆயோக் அமைப்பு பாராட்டுகிறது. ஐ.நா. அறிக்கை தமிழ்நாட்டின் திட்டங்களை பாராட்டுகிறது. வெளிமாநிலங்களில் இருந்து வரும் அமைச்சர்கள் பாராட்டுகிறார்கள். சில ஒன்றிய அமைச்சர்கள் கூட தமிழ்நாடு அரசின் திட்டங்களைப் பாராட்டுகிறார்கள். இந்தப் பாராட்டுகள் அனைத்துக்கும் ஒற்றைக் காரணமாக இருப்பவர்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

சில மாதங்களுக்கு முன்னால் வெளியான ‘இந்தியா டுடே’ இதழ், நம்முடைய தலைவர் அவர்களை ‘HUMBLE SOLDIER’! என்று வர்ணித்தது. இந்த ‘’ அடக்கமான போர் வீரர்’ தான் அழகான தமிழ்நாட்டை உருவாக்கி இருக்கிறார்.

போர் வீரர் என்றால் சாதாரண போர் வீரர் அல்ல, வெற்றிகள் பல குவித்த போர் வீரராக வலம் வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்’ என்ற சட்ட மசோதாவுக்கு இருந்த தடைகளை நீக்கி அனைத்துச் சாதியில் இருந்தும் அர்ச்சகர்களை நியமனம் செய்தார். **இந்திய அளவிலான மருத்துவப் படிப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவிகித இடங்களை சட்டப் போராட்டத்தின் மூலமாக உறுதிப்படுத்தி பெற்றுத் தந்தார். ஆன்லைன் தடைச் சட்டத்துக்கு அனுமதி தராத ஆளுநரை - பணிய வைத்தார். சமூக நீதிக்கான சட்டப் போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறார். மாநில சுயாட்சிக்கான சட்டப் போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறார்.**

ஒன்றிய அரசு உருவாக்கிய மூன்று வேளாண் சட்டங்கள் - குடியுரிமைச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். நீட் தேர்வுக்கு எதிராக - அதற்கு விலக்குக் கேட்கும் சட்ட மசோதாவைக் கொண்டு வந்தார். இந்தித் திணிப்புக்கு எதிராக கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மாநில சட்டமன்றம் உருவாக்கி அனுப்பும் சட்ட மசோதாக்களை உடனடியாக ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க வேண்டும் - அதற்கு கால நிர்ணயம் வழங்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். நிதி உரிமையைப் பறிக்கும் ஜி.எஸ்.டி.க்கு எதிராக தொடர்ந்து பேசி வருகிறார் முதலமைச்சர். அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். பொது சிவில் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறார். இவை அனைத்தும் மூன்றாண்டு காலத்தில் அவர் வென்று காட்டிய வெற்றிகள் ஆகும்.

அதனால்தான் அவர் செல்லும் இடமெல்லாம் மக்கள் அளிக்கும் வரவேற்பு இந்த வெற்றியின் அடையாளங்களாக இருக்கின்றன.

**இன்றைக்கு அவர் எங்கு சென்றாலும் அவரை நோக்கி மக்கள் கூட்டம் அலை யலையாக வருகிறது. தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் போகும் போது இருக்கும் எழுச்சியைத் தான் பார்க்கிறோம். விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவுக்கு முதலமைச்சர் அவர்களை அழைத்து வந்த போது சாலையின் இரு பக்கமும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வரவேற்பு கொடுத்தார்கள். தாய்மார்கள் உற்சாகமாக கையசைக்கிறார்கள்.**

**கல்லூரி மாணவிகள் ‘ அப்பா ... அப்பா’ என்று அழைக்கிறார்கள்.**



அமைச்சர் - முனைவர்
**க.பொன்முடி**
கழக துணைப் பொதுச் செயலாளர்

தாய்மார்களிடம் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கிறதா என்றும் - மாணவியரிடம் புதுமைப் பெண் திட்ட நிதி உதவி கிடைக்கிறதா என்றும் கேட்கிறார். எல்லோரும் முறையாக வருகிறது என்று சொல்கிறார்கள். அந்தளவுக்கு அனைத்துத் திட்டங்களும் மக்களுக்கு நேரடியாக கிடைக்கும் வகையில் பார்த்துப் பார்த்து முதலமைச்சர் அவர்கள் செய்து தருகிறார்கள்.

அனைத்துப் பகுதியிலும் ஒரே மாதிரியான உற்சாகமான வரவேற்பு முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்தது. இதில் விழுப்புரம் மாவட்டத்தில் நேரடியாக நான் பார்த்தேன்.

விழுப்புரம் மாவட்டத்தை ‘தளபதி மாவட்டம்’ என்று நான் அழைப்பது தான் வழக்கம்.கழக வரலாற்றிலும் - கலைஞரின் வரலாற்றிலும் முக்கிய இடம் பிடித்தது இந்த விழுப்புரம் மாவட்டம். 2004 விழுப்புரம் மண்டல மாநாட்டில் தான் தளபதியார் அவர்கள் முதன்முதலாக மாநாட்டுத் தலைமைப் பொறுப்பை வகித்தார். அந்தப் பெருமை விழுப்புரம் மாவட்டத்துக்கு உண்டு.அந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தேன் என்று தளபதியார் அவர்கள் என்னுடைய பெயரை எப்போதும் மறக்காமல் குறிப்பிடுவார்கள்.

அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் பேசும் போதும், **‘’நான் எனது 26வது வயதிலே ஒரு மாநாட்டுக்கு தலைமை வகிக்கும் வாய்ப்புப் பெற்றேன். தளபதி ஸ்டாலினுக்கு அந்த வாய்ப்பு 50வது வயதில்தான் கிடைத்திருக்கிறது. இவ்வளவு தாமதமாக கிடைப்பதற்கு காரணம், எதுவும் அவசரமாக, விரைவாக கிடைப்பதைவிட தாமதமாக கிடைத்தால்தான் அதற்கு வலு அதிகம். அந்த வலு உனக்கு சேர்ந்திருக்கிறது’’** என்று குறிப்பிட்டார் தலைவர் கலைஞர் அவர்கள். **‘’எங்கிருந்து அங்கீகாரம் கிடைக்கவில்லையோ அதை தெரிந்துகொண்டு எங்கும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் அணுகுமுறையை கற்றுக் கொள்ள வேண்டும்,’’** என்று சொன்னார்கள். அதைத் தான் இன்று நாம் தமிழ்நாடு முழுக்க பார்க்கிறோம்.

முதலமைச்சர் அவர்களை இன்று தமிழ்நாடு முழுமையும் அங்கீகரித்துவிட்டது என்ற காட்சியைத்தான் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

15 வயதில் கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.வை தொடங்கிய இளைஞர், இன்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் உழைப்பால், அன்பால் வென்று காட்டிய காட்சியைத் தான் இன்று நாம் பார்க்கிறோம்.

அவர் வாழும் காலத்தில் வாழ்கிறேன் என்பதும் - அவர் ஆளும் அமைச்சரவையில் நானும் ஒருவன் என்பதும்தான் எனக்குக் கிடைத்த பெருமை ஆகும்.

**முதலமைச்சர் - திராவிட நாயகன் அவர்கள் நூறாண்டு வாழவும், ஆளவும் வாழ்த்துகிறேன்.**